# அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் தங்களுக்குள்ளேயே எவ்விதமான உள்ளடக்கத்தையும் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலும் இவை வெற்றுப் பாத்திரங்களாகவே உள்ளன. ஒவ்வொரு தலைமுறையினரும் தங்கள் வாழ்க்கை அனுபவத்தில்பெற்ற உன்னதமான அனுபவங்களை கொண்டு நிரப்பிக் கொள்ளலாம்.

- கேசவானந்த பாரதி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த விளக்கம்

## விளக்கம்

அடிப்படை உரிமை என்ற அதன் பெயரிலிருந்தே அதன் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. இதற்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள உத்திரவாதமும் முக்கியத்துவம் நன்கு வெளிப்படுகிறது. மேலும் அரசியலமைப்பினால் உத்திரவாதமும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டின் அடிப்படை சட்டமாகவும் திகழ்கிறது. ஒவ்வொரு தனிமனிதனின் உடைமை, அறிவுசார் உரிமை, நீதி மற்றும் ஆன்மிக மேம்பாடு போன்ற அனைத்திற்கும் மிக அத்தியாவசியமாக அடிப்படை உரிமைகள் உணரப்படுகிறது.

- அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் பகுதி –III ல் சரத்து 12 முதல் 35 வரை உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.
- அரசியலமைப்பின் பகுதி –III இந்தியாவின் மகா சாசனம் (Magna carta of India) என அழைக்கப்படுகிறது.
- இப்பகுதி மிக நீளமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய, நீதிமன்றத்தை அணுகி தீர்வு பெறும் அடிப்படை உரிமைகள் கொண்டுள்ளது.
- நமது அரசியலமைப்பின் அடிப்படை உரிமையானது உலகின் வேறு எந்த நாட்டின் அடிப்படை உரிமைகளை காட்டிலும் அதிக விரிவானது ஆகும். குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டை காட்டிலும் விரிவானதாகும்.
- அரசியலமைப்பினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அனைத்து நபர்களுக்கும் எவ்வித வேறுபாடும் காட்டுவதில்லை.
- அனைத்து தனி நபர்களின் சமத்துவத்தையும், தனி மனிதனின் கௌரவத்தையும், பொதுமக்களின் நலன்களையும் மற்றும் தேசத்தின் ஒற்றுமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- அடிப்படை உரிமைகளின் நோக்கம் அரசியல் மக்களாட்சியை (Political Democracy) வளர்ப்பதாகும்.

உண்மையில் நமது அரசியலமைப்பில் ஏழு (7) அடிப்படை உரிமைகள் இருந்தன.

| | |
|---|---|
| 1. | சமத்துவ உரிமை ஷரத்து 14 முதல் 18 வரை |
| 2. | சுதந்திர உரிமை ஷரத்து 19 முதல் 22 வரை |
| 3. | சுரண்டலுக்கு எதிரான உரிமை சரத்து 23 முதல் 24 வரை |
| 4. | சமய சுதந்திர உரிமை சரத்து 25 முதல் 28 வரை |
| 5. | கலாச்சார மற்றும் கல்வி சரத்து 29 முதல் 30 வரை |
| 6. | அரசியலமைப்பு வாயிலான தீர்வு சரத்து 32 (சரத்து 226 – உயர்நீதிமன்றம்) |
| 7. | சொத்துரிமை (சரத்து 31 1978-ல் 44-வது அரசியலமைப்பு திருத்தம் வாயிலாக நீக்கப்பட்டது. இச்சரத்து தற்போது 300A-வாக உள்ளது. |

## அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம்

- அடிப்படை உரிமைகள் பூர்ணத்துவமானடிவ அல்ல ஆனால் தகுதி வாய்ந்தவை.
- அரசானது இவற்றின் மீது போதுமான கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

- இவை பெரும்பாலும் அரசின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு எதிராக உள்ளன.
- நீதிமன்றங்களை அணுகி தீர்வு பெற முடியும்.
- உச்ச நீதிமன்றம் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் உத்தரவாதமும் வழங்குகின்றது. மேலும் பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தை அணுகி தீர்வு பெற முடியும்.
- இவைபுனிதமானவையோ அல்லது நிரந்தரமானவையோ அன்று. பாராளுமன்றம் இவற்றை குறைக்கவோ அல்லது நீக்கவோ முடியும்.
- தேசிய நெருக்கடி நிலை செயல்பாட்டில் இருக்கும் போது அடிப்படை உரிமைகளில் ஷரத்து 20 மற்றும் 21-ஐத் தவிர பிற அடிப்படை உரிமைகளை செயல்படாத வண்ணம் நிறுத்தி வைக்க முடியும். ஷரத்து 19-ஐ யுத்தம் அல்லது அந்நிய படையெடுப்பின் போது செயல்படாமல் தடுத்த நிறுத்த முடியும்.

## அரசின் வரையறை (சரத்து 12)

ஒருவரது அடிப்படை உரிமையை மீறியது அரசா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக சரத்து 12-ஆனது "அரசு"(State) என்பதில் எவையெல்லாம் அடக்கம் என்பதற்குண்டான வரையறையைக் கொடுக்கிறது.

சரத்து 12-ன்படி,"அரசு" என்ற சொல்லில் பின்வருவன அடங்கும்.

- (1) இந்திய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம்; மற்றும்
- (2) ஒவ்வொரு மாநிலத்தினுடைய அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்; மற்றும்
- (3) இந்திய ஆட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து உள்ளூர் அதிகார அமைப்புகள் (Local Authorities) அல்லது பிற அதிகார அமைப்புகள் (Other Authorities); அல்லது
- (4) இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து உள்ளூர் அல்லது பிற அதிகார அமைப்புகள்.

## அடிப்படை உரிமைகளுடன் முரண்படும் சட்டங்கள் (சரத்து 13)

சரத்து 13ன் படி அடிப்படை உரிமைகளுக்கு முரண்படுமாறு அல்லது மீறுமாறு சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது இல்லாநிலையதாகும் மற்றும் செல்லாததாகும்.

- சரத்து 13(1) – அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்பாக, இந்திய எல்லைக்குள் அமலில் உள்ள அனைத்து சட்டங்களும் (law in force), அடிப்படை உரிமைகள் குறித்த வகைமுறைகளுடன் எந்த அளவிற்கு முரண்பட்டதாக உள்ளதோ அந்த அளவிற்கு இல்லா நிலையதாகும்.
- சரத்து 13(2) – குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ அல்லது மீறுவதாகவோ, அரசு எந்தச் சட்டத்தையும் (law) இயற்றக் கூடாது மற்றும் இந்நிபந்தனைக்கு முரணாக (in contravention) சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது அம்முரண்பாடு அளவிற்கு இல்லாநிலையதாக்கப்படும்.

## அடிப்படை உரிமைகள்

1. **சமத்துவ உரிமை (சரத்து 14 – 18)**
   - சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சமமான பாதுகாப்பு சரத்து – 14.
   - சாதி, சமய, இன, பால், பிறப்பிட வேறுபாடுகளினால் பாரபட்சம் காட்டாமை சரத்து – 15.

- அரசு வேலைகளில் சமவாய்ப்பு ஷரத்து – 16.
- தீண்டாமை ஒழிப்பு மற்றும் இதன் செயல்பாட்டினை தடுத்தல் சரத்து – 17.
- இராணுவத்திலும் கல்வித் துறையிலும் சாதனை புரிவோருக்கு வழங்கப்படும் பட்டங்களைத் தவிர பிற பட்டங்கள் ஒழிப்பு சரத்து – 18.

**2. சுதந்திர உரிமை : (ஷரத்து 19 – 22)**

- இந்திய அரசியலமைப்பு விதி 19 ஏழு (7) அடிப்படை உரிமைகளை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது.
- குற்றங்களுக்குத் தண்டனையளிப்பது குறித்த பாதுகாப்பு, (ஷரத்து – 20)
- உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் பாதுகதப்பு (ஷரத்து – 21)
- ஆரம்ப கல்வி கற்பதற்கான உரிமை - சரத்து 21A
- கைது செய்யப்படுவதற்கும், காவலில் வைக்கப்படுவதற்கும் எதிராகப் பாதுகாப்பு - சரத்து 22.

**3. சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு (சரத்து 23 மற்றும் 24)**

- மனிதர்களை வியாபார பொருளாக கருதி விற்பது மற்றும் கட்டாய வேலை வாங்குவதை தடைசெய்தல் - ஷரத்து 23.
- 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளிலோ, மற்றும் ஆபத்தான வேலைகளில் அமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளது - ஷரத்து 24.

**4. சமயச் சுதந்திர உரிமை (சரத்து 25 – 28)**

- மனசாட்சி படி செயல்படவும் சுதந்திரமாக வேலைகளில் ஈடுபடவும் மற்றும் விரும்பும் சமயத்தை பின்பற்றவும் மத பிரச்சாரம் செய்யவும் உரிமை - சரத்து 25.
- சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை - சரத்து 26.
- சமய வளர்ச்சிக்காக வரி செலுத்தாமல் இருக்க உரிமை - ஷரத்து 27.
- சமய போதனைகளுக்குச் செல்லாமலிருக்க உரிமை - சரத்து 28.

**5. கலாச்சார மற்றும் கல்வி உரிமை (சரத்து 29 – 30)**

- சிறுபான்னையினர் மொழி, எழுத்து வடிவம் மற்றும் கலாச்சாரங்களை பாதுகாக்கும் உரிமை. ஷரத்து 29.
- சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நிர்வகிக்கும் உரிமை. ஷரத்து 30.

**6. அடிப்படை உரிமைகளுக்கான கட்டுப்பாடுகள் (சரத்து 31A, 31B மற்றும் 31C)**

**7. அரசியலமைப்பு வாயிலாக தீர்வு பெறும் உரிமை - சரத்து 32**

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் நேரடியாக உச்ச நீதிமன்றத்தை அணுகி தீர்வுபெற கீழ்க்கண்ட நீதிப்பேராணைகள் வகை செய்கின்றன.

**சமத்துவ உரிமை (சரத்து 14 - 18)**

**சரத்து – 14**

**சட்டத்தின் முன் சமம்**

சட்டத்தின் “முன் அனைவரும் சமம்” என்பது இங்கிலாந்தில் தோன்றியதாகும்.

- எந்த நபருக்கும ஆதரவாக சிறப்பு சலுகைகளை மறுத்தல்
- சட்டத்தின் முன் எந்த ஒரு தனி நபருக்கும் எவ்வித சலுகைகள் காட்டப்படாது

- சட்டத்திற்கு மேல் எதுவும் இல்லை.

**அனைவருக்கும் சமமான பாதுகாப்புச் சட்டம்**

இக்கருத்து அமெரிக்க அரசியலமைப்பிலிருந்து எடுத்ததாகும்.

- சட்டத்தின் வாயிலாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு ஏற்ப சூழ்நிலையின் அடிப்படையில் சமமாக நடத்தப்படுவர்.
- சமநிலையில் உள்ளவர்களுக்கு சட்டம் சம பாதுகாப்பை வழங்கும்.
- எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒன்றாக கருதப்பட வேண்டும்.

**சரத்து – 15**

- அரசு எந்தக் குடிமகனையும் அவனுடைய மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைக் காரணமாகக் காண்பித்து, அவனை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது.
- எந்தக் குடிமகனும் அவன் சார்ந்துள்ள மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் கடை, பொது ஒய்வு விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் பொதுவான பொழுதுபோக்கு இடங்களில் நுழையும் போதும் தடைப்படுத்தவோ அல்லது நிபந்தனை விதிக்கப்படவோ கூடாது.
- பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதிலிருந்து அரசினை இந்த ஷரத்தில் உள்ள எதுவும் தடுக்காது.
- அரசு, சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கி உள்ள வகுப்பினர்களுக்கு அல்லது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு தனிச் சலுகைகள் அளித்து, அவர்களும் சமுதாயத்தில் முன்னேற்றமடைய தனிச்சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதற்கு அரசினை எதுவும் தடுக்காது.

**சரத்து 16**

- அரசின் கீழுள்ள எந்த அலுவலகத்திலும் பணி அல்லது நியமனம் குறித்த விவகாரங்களில் எல்லா குடிமகன்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.
- இந்தியாவின் எப்பகுதியில் வாழ்ந்து வருவதாக இருப்பினும் வேலை வாய்ப்புகளில் அரசு சம வாய்ப்பு அளிக்க மறுக்கக் கூடாது. மதம், இனம், சாதி, பால், இறங்குரிமை, பிறப்பிடம் மற்றும் உறைவிடம், இவற்றின் அடிப்படையில் அரவின் ஒரு அலுவலகத்தில் அல்லது பணியில் ஒரு குடிமகன் அமரத் தகுதியற்றவனாக ஆக்கப்படக் கூடாது.
- அரசுப் பணிகளை திறமையாகச் செய்வதற்குரிய தகுதிகளை நிர்ணயிப்பது ஷரத்து 16க்கு எதிராக அமையாது.

**மண்டல கமிஷன்**

மொராஜ் தேசாய் அரசாங்கத்தால் 1979-ம் ஆண்டில் இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பு கமிஷன் B.P.மண்டல் தலைமையில் அமைக்கப்பட்டது. (முதல் வகுப்பு காகாகலேல்கர் – 1953 – 55). அரசயிலமைப்பின் ஷரத்து 340-ல் சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிலைகளை ஆராய்ந்து அவர்களின் மேம்பாட்டிற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்கிறது. இக்கமிஷன் அரசு பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) 27% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என பரிந்துரைத்தது. இதனால் மொத்த இட ஒதுக்கீடு அனைத்து சாதியினருக்கும் (SC, ST, & OBC) 50% மாக நிர்ணயிக்கப்பட்டது.

1950-ல் V.P. சிங் அரசாங்கம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) அரசு பணிகளில் 27% இட ஒதுக்கீட்டை வழங்கியது.
1992-ல் மண்டல் வழக்கு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினால் பாலேடு அடுக்கில் (Creamy Layer)உள்ளவர்களை அடையாளம் காண ராம்நந்தன்தலைமையில் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.
1993-ல் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது.
1994-ல் 76-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மூலம் தமிழ்நாடு இட ஒதுக்கீடு சட்டம் 1994-ல் இயற்றப்பட்டது. இதனை 9-வது அட்டவணையில் சேர்த்து நீதிமன்ற புனராய்வுக்கு உட்படுத்தாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.
இச்சட்டம் 50% இடஒதுக்கீட்டை தாண்டி 69% இட ஒதுக்கீடு அளித்துள்ளது.

### சரத்து 17

❖ இந்திய அரசியலமைப்பின் 17-வது ஷரத்து, தீண்டாமையை ஒழிக்கிறது மற்றும் எந்த வகையிலும் தீண்டாமை நடைமுறைக்குட்படுத்தப்படுவதை தடுக்கிறது. மேலும் தீண்டாமையின் மூலம் எந்த தகுதியின்மையாவது ஏற்படுத்தப்பட்டால் அது குற்றமாக கருதப்பட்டு சட்டப்படி தண்டிக்கப்படும் என்று கூறுகிறது.

### சரத்து 18

- ஒரு குடிமகனுக்கோ அல்லது குடிமனகல்லாதவனுக்கோ அரசு பட்டங்கள் வழங்குவதை தடை செய்கிறது. ஆனால் இராணுவம் மற்றும் கல்வியில் சிறப்புடையவர்களுக்கு பட்டங்கள் அளிப்பதை தடுக்கவில்லை.
- வெளிநாட்டு அரசிடமிருந்து இந்தியக் குடிமகன் ஒருவன் பட்டம் பெறுவதை தடை செய்கிறது.

**சுதந்திர உரிமை (சரத்து 19 – 22)**

### சரத்து 19

➢ **இந்திய அரசியலமைப்பு விதி 19 ஏழு (7) உரிமைகளை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது.**

| ஷரத்து | உரிமைகள் | நியாயமான கட்டுப்பாடுகள் |
|---|---|---|
| 19 (1) (a) | பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் | 1. அரசின் பாதுகாப்பு; 2. அண்டை நாட்டுடன் நட்புறவு; 3. பொது அமைதி; 4. அறநெறியிலான ஒழுக்கம்; 5. நீதிமன்ற அவமதிப்பு; 6. அவதூறு கூறல்; 7. குற்றம் செய்யத் தூண்டுதல்; 8. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை |
| 19 (1) (b) | ஆயுதங்களின்றி அமைதியாக கூடுவதற்கான சுதந்திரம் | 1. பொது அமைதி அல்லது அறநெறியின் நலனுக்குட்பட்டு; 2. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையின் நலனுக்கு உட்பட்டு |
| 19 (1) (c) | கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம் | |
| 19 (1) (d) | இந்தியா முழுவதும் சென்று வர சுதந்திரம் | 1. பொது மக்களின் நலனுக்குட்பட்டு; 2. பழங்குடியினரின் நலநன பாதுகாக்கும் பொருட்டு. |
| 19 (1) (e) | இந்தியாவிற்குள் எப்பகுதியிலும் தங்கி வாழும் உரிமை | |
| 19 (1) (g) | எந்த தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தைச் | 1. நியாயமான தடையாக இருக்க வேண்டும்; 2. பொது மக்களின் நலனிற்குட்பட்டதாக இருக்க |

| | | |
|---|---|---|
| | செய்யும் சுதந்திரம் | வேண்டும். |

**சரத்து 20**

குற்றங்களுக்கான குற்றத் தீர்ப்பளித்தல் குறித்த பாதுகாப்பு

**முன் தேதியிட்டு அமலாகும் சட்டம் (Ex – Post facto Legislation)**

- ஒரு குற்றமென குற்றஞ்சாட்டப்பட்ட செயல் செய்யப்பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத்தினை மீறியதனைத் தவிர வேறு எந்த குற்றத்திற்காகவும் ஒரு நபர் தண்டிக்கப்படலாகாது.

**இரட்டை இடர் (Double Jeopardy)**

- அரசியலமைப்புச் சட்டப்படி எந்த நபரும், ஒரே குற்றத்திற்கு ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கு இடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது.
- இரட்டை இடர் தண்டனையானது நீதிமன்ற சட்டம் அல்லது தீர்ப்பாயம் மூலம் வழங்கப்படுவது மட்டுமே ஏற்கப்படும். துறை ரீதியான அல்லது நிர்வாக ரீதியாக வழங்கப்படும் தண்டனைகள் ஏற்கப்பட மாட்டாது.

**தன்னைத்தானே குற்றஞ்சாட்டல் (Self Incrimination)**

- ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு நபர் தனக்கே எதிராக ஒரு சாட்சியாக ஆக்கப்படுவதற்கு வற்புறுத்தப்படக்கூடாது.

## சரத்து 21

- எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும் சட்டத்தால் நடைமுறைகளில் தவிர பிற வழிகளில் மீறக் கூடாது.
- சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின் படி (procedure established by law) அல்லாமல் தனிமனித சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டம், ஷரத்து 21–க்கு முரணானது.

**கல்வி உரிமை (ஷரத்து 21A )**

- 2002-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 86-ன் படி இவ்வுரிமை சேர்க்கப்பட்டது.
- இதன்படி மாநிலங்கள் 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க வேண்டும்.
- இச்சரத்துப்படி ஆரம்பப்பள்ளி படிப்பு மட்டுமே அடிப்படை உரிமையாகும். உயர்நிலை பள்ளி படிப்பு அல்லது தொழில்கல்வி இதில் சேராது.

## சரத்து 22

- சில சூழ்நிலைகளில் கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிராக ஷரத்து 22 பாதுகாப்பளிக்கிறது.
- சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களுக்கு பின்வரும் உரிமைகளை அளிக்கிறது.
- அவரை கைது செய்வதற்குண்டான காரணங்களை எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அவருக்கு தெரிவிக்க வேண்டும்.
  - தன் சார்பாக வாதாட ஒரு வழக்கறிஞரை தன் விருப்பப்படி கைது செய்யப்பட்டவர் அமர்த்திக் கொள்ளலாம்.
  - கைது செய்யப்பட்ட நபரை, அவர் கைதான நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன் முன்னிலைப் படுத்து வேண்டும்.
  - ஆனால் ஷரத்து 22-இன் படி, ஒரு அயல்நாட்டவர் சிறை

வைக்கப்பட்டால் அவருக்கு மேற்படி உரிமைகள் கிடையாது.

## தடுப்புக்காவல்

- ❖ தடுப்புக்காவலுக்கு உட்படும்நபர் நீதிமன்ற விசாரனை இல்லாமலும் மற்றும் நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்படாதவரும் ஆவர்.
- ❖ அவருக்கு வழங்கப்படும் தடுப்புக் காலம் தண்டனை அவர் முன்பு செய்த குற்றத்திற்கு இல்லை எதிர்காலத்தில் குற்றம் செய்யக்கூடும் என்ற அச்சத்தில் முன்கூட்டியே தடுப்புக் காவலில் வைப்பது ஆகும்.
- ❖ மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு ஒருவர் தடுப்புக் காவலில் சிறைப்படுத்தப்பட்டிருக்கக் கூடாது. அப்படி மூன்று மாதங்களுக்கு மேல் ஒருவரை சிறைப்படுத்த வேண்டும் எனில் அச்சிறைப்படுத்தும் உத்திரவு, ஆலோசனைக் குழுவிடம் கட்டியனுப்பப்பட்ட (referring) வேண்டும்.
- ❖ ஆலோசனைக் குழு, அவ்வாறு சிறைப்படுத்தியது நியாயமற்றது என அறிவித்தால், சிறைப்படுத்தப்பட்ட நபர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

## தடுப்பு காவல் சட்டங்கள்

- ❖ தடுப்பு காவல் சட்டம் 1950 – 1969-ல் காலாவதி ஆகிவிட்டது.
- ❖ உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கும் சட்டம் (MISA)- 1971, 1978- ல் திரும்ப பெறப்பட்டுவிட்டது.
- ❖ அயல்நாட்டு பரிவர்தனைகளை பாதுகாப்பது மற்றும் கள்ளகடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் சட்டம் (COFEPOSA)- 1974
- ❖ தேசிய பாதுகாப்பு சட்டம் (NSA)
- ❖ கருப்பு சந்தைகளை தடுத்தல் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தேவை பராமரிக்கும் சட்டம் 1980.
- ❖ தீவிரவாதம் மற்றும் இடையூறு நடவடிக்கைகளை தடுக்கும் சட்டம் 1985 (TADA) 1995- ல் காலாவதியாகிவிட்டது.
- ❖ சட்டத்திற்கு புறம்பான போதைபொருள்கள் மற்றும் மனோநிலையை பாதிப்புக்கு உள்ளாக்கும் பொருட்களை தடுக்கும் சட்டம் 1988 (PITNDPSA).
- ❖ தீவிரவாதத்தை தடுக்கும் சட்டம் (POTA) 2002-ல் திரும்பபெறப்பட்டது. இந்த தடுப்புக்காவல் சட்டத்தை பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் இயற்றலாம்

## சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை (ஷரத்துகள் 23 மற்றும் 24)

### சரத்து 23

- ❖ ஷரத்து 23-இன்படி மனித இழிதொழில் வாணிகமும் (traffic in human beings), ஊதியமற்ற கட்டாய உழைப்பு முறை (Forced begger) மற்றும் இது போன்ற பிற வலுக்கட்டாய உழைப்பு முறைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.
- ❖ இத்தடையை மீறி அவ்வாறு ஏதேனும் செய்யப்படுமானால், அது தண்டிக்கத்தக்க குற்றச் செயலாகும்.

### சரத்து 24

- ❖ ஷரத்து 24-இன்படி 14 வயதிற்குப்பட்ட குழந்தைகள் யாரும், தொழிற்சாலையிலோ அல்லது சுரங்கத்திலோ பணிக்கு அமர்த்தப்படக் கூடாது. மேலும் பிற அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்தப்படக் கூடாது.

## சமய (அல்லது) மத சுதந்திர உரிமை (ஷரத்துகள் 25 முதல் 28)

## சரத்து 25

❖ ஷரத்து 25-இன்படி, பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், அறநெறி ஆகியவற்றுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் உட்பட்டு எல்லோரும் தங்கள் உளநெறிக்கு உகந்ததாகப்படும் சமய நம்பிக்கையைக் கொள்ளவும், சுதந்திரமாக அதனைப் பின்பற்றவும், மற்றவர்களுக்கு அதன் உண்மையை உணர்த்திப் பரப்பவும், அரசியல் சட்ட உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள்.

## சரத்து 26

❖ அரசியலமைப்புச் சட்டத்தின் 26-வது ஷரத்து பொது அமைதி, ஒழுங்கு, அறநெறி (Morality), சுகாதாரம் ஆகியவற்றின் நலனுக்குட்பட்டு,

- ஒவ்வொரு சமயரும் (every religious denomination) அதற்குரிய அற நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றது.
- சமய சம்பந்தமான விஷயங்களில் தனது சொந்த விவகாரங்களை தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றது.
- அசையும் சொத்துக்களையும் அசையாச் சொத்துக்களையும் சேர்த்துக் கொள்ளவும், உரிமையாக்கிக் கொள்ளவும் உரிமை பெற்றுள்ளது.
- அவ்வாறு சேர்ந்து சமயக் கூடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்ட சொத்துக்களைச் சட்டங்கள் கூறும் முறையில் நிர்வகித்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருக்கின்றது என்று அரசயிலமைப்புச் சட்டம் விளம்புகிறது.

## சரத்து 27

❖ ஷரத்து 27-இன் படி, எச்சமயத்திற்கும் அல்லது அதன் உட்பிரிவிற்கும் வரி விதித்து, அவ்வரியின் வருவாயைச் சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவு செய்யும் நோக்கத்துடன் எந்த ஒரு குடிமகனும் வரிப்பணம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது என்று கூறுகின்றது.

## சரத்து 28

❖ அரசின் நிதி உதவிளை முழுமையாகப் பெற்று கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில் சமய போதனை செய்வது 28-வது ஷரத்தின் கீழ் தடுக்கப்படுகிறது.

❖ அரசின் நிதி உதவியைப் பெறாமல் கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில் சமய போதனை செய்வது தடை செய்யப்படவில்லை.

❖ மேலும், பள்ளி குழந்தைகளை கட்டாய மத போதனைகளை கேட்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தக் கூடாது.

**காலச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் (ஷரத்து 29 முதல் 30)**

## சரத்து 29

❖ இந்தியாவில் எப்பகுதியில் வாழ்பவராக இருப்பினும்தனி மொழி ஒன்றை அல்லது எழுத்து முறையை அல்லது தனிக் கலாச்சாரம் ஒன்றை பெற்றிருக்கும் சமூகத்தினர் அம்மொழி, எழுத்து வடிவம் கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் அரசியலமைப்பு சட்ட உரிமையைப் பெற்றுள்ளார்கள்.

❖ அரசு கல்விக் கூடங்களிலும், அல்லது அரசின் உதவி பெற்று நடத்தப்படுகின்ற கல்விச்

சாலைகளிலும் எந்தவொரு குடிமகனும் சமயம், இனம், சாதி, மொழி அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றினால் கல்வி பெறும் வாய்ப்பை இழக்க முடியாதபடி அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 29 வகை செய்கிறது.

## சரத்து 30

- ❖ மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுபான்மையினராக உள்ள எல்லாரும் தங்கள் விருப்பப்படி கல்விக் கூடங்களை ஏற்படுத்தி அவற்றை நிர்வகித்துக் கொள்ளக் கூடிய முதல் உரிமையை வழங்குகிறது.

## அரசியல் ரீதியிலான தீர்வு வழிகளுக்கு உரிமை (ஷரத்து 32)

- ❖ சரத்து 32-ன்படி அடிப்படை உரிமைகளால் பாதிக்கப்பட்ட நபர் அரசியலமைப்பு மூலம் தீர்வு பெறலாம். பாதிக்கப்பட்ட நபர் நேராக உச்ச நீதிமன்றத்தை நாடலாம் என்பதே சரத்து 32-ன் படி ஒரு அடிப்படை உரிமையாகும்.
- ❖ ஏனெனில் அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிக்கவும், உரிமை மீறலைத் தவிர்க்கவும், உரிமையை நிலைநாட்டவும் சரத்து 32 வகை செய்கிறது.
- ❖ எனவே இந்த சரத்தை ஒரு போதும் செயலிழக்கச் செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியாது. மேலும் இந்த அரசியலமைப்பில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என ஏதாவது ஒரு குறிப்பிட்ட சரத்தின் பெயரைக் கூறும்படி என்னிடம் கேட்கப்பட்டால், இச்சரத்து இல்லாமல் இருப்பின் அரசியலமைப்பே செல்லாத ஒன்றாகக் கூடிய இச் சரத்தினைத் தவிர வேறு எந்த சரத்தையும் நான் குறிப்பிடமாட்டேன். இது அரசியலமைப்பின் இருதயம் / ஆன்மா ஆகும் என டாக்டர் அம்பேத்கார் குறிப்பிடுகிறார்.
- ❖ ஒருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்படின் உச்ச நீதிமன்றம் எவ்வகையான நீதிப்பேராணை அல்லது உத்தரவுகளை பிறப்பிக்குமோ அவற்றை சரத்து 226-ன்படி உயர்நீதிமன்றமும் (High Court) பிறப்பிக்கலாம்.
- ❖ எனினும் உயர் நீதிமன்றத்தின் நீதிப் பேராணை பிறப்பிக்கும் அதிகராமானது உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை விட பரந்தது என சரத்து 226 கூறுகிறது.
- ❖ ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால் தான் சரத்து 32-ன்படி உச்ச நீதிமன்றம் ஆணை பிறக்கும். ஆனால், அடிப்படை உரிமையின்றி சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும் உயர்நீதிமன்றம் அவ்வாணையை பிறப்பிக்கும்.

### Habeas Corpus - ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை

சட்டத்திற்கு புறம்பான முறையில் சிறைப்பிடித்து வைக்கப்பட்டவரை விடுவிக்க.

### Mandamus – செயலுறுத்தும் நீதிப்பேராணை

பொதுக் கடமையான ஒரு செயலை ஓர் அதிகாரி அல்லது கூட்டமைப்பு அல்லது கீழ் நீதிமன்றம் செய்யத் தவறினால் அக்கடமையைச் செய்ய.

### Certirorari – நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை

நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள், அதிகாரிகள், தம் அதிகாரவரம்பை மீறிச் செயல்பட்டாலோ, அறமுறைக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ

அவற்றை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கு தேவையான ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு நீதிமன்றம் ஆணையிடுவது.

## Prohibition – தடையுறுத்தும் நீதிப்பேராணை

கீழ் நீதிமன்றமோ, ஆட்சி அதிகாரியோ தம் அதிகார வரம்பை மீறி அல்லது சட்டமுரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், அவை மேற்கொண்டு நடத்தாமல் தடைசெய்ய.

## Quo Warranto – தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை

- ❖ பொது அதிகாரப் பதவியில் உள்ளவரை அவர் எத்தகுதியில் அப்பதவி வகிக்கிறார் என்று வினவி, பிறப்பிக்கப்படுதல்.

## பகுதி III - க்கு வெளியிலுள்ள உரிமைகள்

- ❖ சரத்து –300A : சட்டத்தின் படி அல்லாமல் வேறு எவ்வகையிலும் ஒரு நபருடைய சொத்துக்களை கைப்பற்ற முடியாது.
- ❖ சரத்து – 301 : சுதந்திரமான வர்த்தகம், வாணிபம் மற்றும் வியாபார உறவுகள் தொடர்பான அனைத்தும் இந்தியா முழுமைக்கும் மேற்கொள்ளும் உரிமை.
- ❖ பிற விதிகள்.

## அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம்

- ❖ நாட்டின் மக்களாட்சி முறையானது கடினமான பாறையால் உருவாக்கப்பட்டதை போன்று உள்ளது.
- ❖ மனிதர்களின் உடமைகள் மற்றும் தார்மீக உரிமைகளை பாதுகாப்பதை அவசியமாக கொண்டுள்ளது.
- ❖ தனி நபர் சுதந்திரத்தை பாதுகாக்கும் வலுவான அரணாக உள்ளது.
- ❖ நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுகிறது.
- ❖ சமுதாயத்தின் சிறுபான்மையோர் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கியோர் நலன்களை பாதுகாக்கிறது.
- ❖ இந்திய அரசின் மதச்சார்பின்மைத் தன்மைக்கு வலுசேர்க்கிறது.
- ❖ அரசாங்கத்தின் எதேச்சதிகார போக்கிற்கு தடை ஏற்படுத்துகிறது.
- ❖ சமூக சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கு அடித்தளம் இடுகிறது.
- ❖ தனிநபர்களின் மாண்பிற்கும் மதிப்பிற்கும் உத்திரவாதம் அளிக்கிறது.
- ❖ குடிமக்கள் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கிறது.

Whatsapp குருபில் சேர - கிளிக் செய்யவும்

Telegram Channel ல் சேர - கிளிக் செய்யவும்